உ



சுபமஸ்து.


# தமிழகம்.

வால்யூம் 1 | 1905௵ அக்டோபர்௴ | நம்பர் 10.


## ஆயுள்விருத்தி நூல்.

(198-ம் பக்கத்தொடர்ச்சி.)

கழனியிற் களையெடுப்போர்கள் மாலைக் காலத்தில் நான்கு இதழ்களையுடையனவாகிய ஆரையென்னும் களைகளின் இலைகள் குவிவதைப் பார்த்து இராப்பொழுது நண்ணினதால் தங்களுக்கு இல்லம் ஏக விடைகொடுக்கும்படி தங்கள் எஜமானர்களை வேண்டிக்கொள்ளுவார்கள். இது கூலிச் சனங்களுக்கு ஓர் கடிகாரம் போலும். இன்னும் (Ground-nut) என்னும் வேர்க்கடலையின் இலைகளும் சாயுங்காலத்தில் குவிந்து மூடிக் கொள்வதை நாம் பார்க்கிறோம். பட்டணங்களில் (Rain-tree அல்லது.) சீமைவாகை என்னும் விருட்சங்களைச் சாலையில் காணுகிறோமல்லவா? அவைகளும் மேற்சொன்ன விதமாகவே உறங்கும் குணத்தை மாலையில் காட்ட ஆரம்பிக்கின்றன. அவயவப் பிராணிகளின் இனங்கள் ஆயுள் விருத்தியில் ஒன்றற்கொன்று வித்தியாசப்படுகின்றன போலத் தாவர வர்க்கத்திலும் சீவத்தன்மை சமத்துவமாயிருந்தாலும் ஆயுள் விர்த்தியில்

பேதாபேதங்கள் ஏற்படுகின்றன. எப்படியென்னில் அவைக ளிற் சிலவற்றிற்கு ஆயுள் மணிக்கணக்காகவும் மற்றும் சில தாவரங்களுக்கு நாட்களாகவும் மாதங்களாகவும் வருடங்க ளாகவும் நூற்றாண்டுகளாகவும் ஏற்பட்டிருக்கிறது. உதாரண மாக, (Mould) பூசணமென்று சொல்லப்படுகிறதானது இரண்டு மணி நேரத்திற்குக்கூட ஜீவித்திருக்காது. தேவ தாரு, புளி முதலிய விருட்சங்கள் ஆயிர வருடக்கணக்காகச் சீவித்திருக்கின்றன. இதுபற்றியன்றோ புளியமரத்தை நம் தேயத்தார்கள் "புளியாயிரம் போந்தாயிரம்" என்று சொல் வார்கள். அதாவது புளிய விருக்ஷம் பலன் கொடுக்கக்கூடிய தாய் ஆயிரவருஷமும் பின்பு கனி கொடுக்கக்கூடிய நிலைமை தவறி ஆயிரவருடங்களும் உயிர் வாழ்ந்திருக்கும் என்று அர்த் தமாகும். இது இப்படியிருக்கத் தோட்டப்பயிர் முதலிய தானியப்பயிர்களும் சில செடிகளும் மூன்று மாதமும், ஆறு மாதமும் ஒரு வருடமும் கால அளவாக ஜீவிக்கக்கூடியவைக ளாயுமிருக்கின்றன. ஆதலால் அவைகளை மூன்று வகுப்பாக பிரிக்கலாம்:—

1. (Annual அல்லது) வசந்தகாலத்தில் உற்பவித்து இலையுதிர் காலத்தில் பட்டுப்போகக்கூடியவைகள். ஆனால் இவைகளைப்பற்றிச் சரியாகச் சொல்லுமிடத்து (Semi-annual) இவைகளுக்கு வயது ஆறு மாதத்திற்குமேலில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

2. உற்பத்தியான இரண்டாம் வருஷக் கடைசியில் நசித் துப்போகக்கூடியவைகளான (Biennial) என்று அழைக்கப் படுபவைகள் சில.

3. முளைத்து இரண்டு வருஷத்திற்கு மேற்பட்டு ஆயிர வருஷக்கணக்காக உயிரோடிருப்பவைகளான (Perennial என்று சொல்லப்படுபவைகள்) சில.

பொதுவாகத் தாவரவர்க்கத்தின் ஆயுள் விர்த்தியைப்பற்றிச் சொல்லப்புகுந்தால், மிகவும் மிருதுவானதும் தண்ணீர் ஜாஸ்தி யுள்ளதுமான அவயவத்தின் றன்மையுடைய தாவரங்கள் சுமார் இரண்டொரு வருஷத்திற்குத்தான் உயிரோடிருக்கும்.

மிகவும் பலமுள்ள கட்டமைதியும் அழுத்தமாகிய ரசம் அல்லது சாறு உடையவைகள் நீண்டகாலம் சீவித்திருக்கக்கூடும். மேலும் எவைகளில் தைலப்பசையும் காரமுள்ள வாசனையும் ஒளஷதத்தின் றன்மையும் பொருந்தியிருக்கின்றனவோ அவைகள் மற்றவைகளைப் பார்க்கிலும் நீண்டகாலம் உயிருடன் கூடியிருக்கின்றன. கோதுமை, வாற்கோதுமை, நெல் முதலிய தானியச்செடிகள் ஒரு வருஷத்திற்குமேல் நீடித்திருக்கமாட்டா. ஆனல் (Thyme, mint, hyssop, balm முதலிய) சில செடிகள் இரண்டு வருஷத்திற்குமேல் நாசமடையக்கூடியவைகளாயிருக்கின்றன. அவைகள் துளசி, கஞ்சாங்கோரை, வாசனைப்புல் முதலிய ஓடதிகள். சில செடிகளும் சிறுமரங்களும் அறுபது வருஷத்திற்குமேல் சீவித்திருப்பதாகத் தெரிகிறது. திராட்சைக் கொடியானது அறுபது வருஷமுதல் நூறு வருஷம் வரையில் சீவித்திருக்கக்கூடியதாயும் வயது செல்லச் செல்ல ஜாஸ்தியாய்ப் பலன் கொடுக்கக்கூடியதாயும் தெரிகிறது. (Rosemary என்னும்)ஓர் பூண்டும் (Ivy என்னும்)ஓர் படர்கொடியும் நீண்ட காலமாய் நூறு வருஷக்கணக்காய் உயிரோடிருக்கின்றதாகச் சொல்லப்படுகின்றன. வீழ் அல்லது விழுதுகளைப் பூமியில் ஊன்றும்படி செய்கிற ஆல், தாழை முதலியவைகளுக்கு வயது நிர்ணயிக்கமுடியாது.

சுருங்கச் சொல்லுமிடத்து எவைகள் பலமாகவும் வன்மையாயும் பெரிதாயுமிருக்கின்றனவோ அவைகளுக்கு வயது ஜாஸ்தியென்றேற்படுகிறது. உதாரணமாக, புளி, பனை, (Oak அல்லது) சிந்தூரமரம், தேவதாரு, ஒலிவமரம், (Mulberry tree அதாவது) முசுக்கட்டை மரம் இவைகள் நீண்டகாலம் சீவித்திருக்கின்றன.

நிரம்ப சீக்கிரத்தில் விர்த்திக்கு வரக்கூடியதான (Fur என்னும்) தேவதாரு, (Birch அல்லது) பூர்சமரம் முதலிய தாவரங்கள் மிகவும் மிருதுவாயிருக்கிறபடியால் கொஞ்ச காலம் தான் சீவித்திருக்கின்றன. இதுவுமன்னியில் இனிப்புள்ள கனிகளைக் கொடுக்கும் மரங்கள் புளிப்புப் பழத்தைத் தருகிற மரங்களைப் பார்க்கிலும் சீக்கிரத்தில் மரித்துப்போகின்றன.

தாவர வர்க்கங்களின் ஆயுணிர்ணயத்தைப் பற்றிப்பின்னல் சொல்லப்படுபவைகளைப் பொதுவான விதியாக அனுசரிக்கலாம்;—இலைகளையும் பழங்களையும் தாமதமாகத் தரக்கூடியதும் அவைகளைச் சீக்கிரத்தில் உதிரச் செய்யாமலிருக்கக்கூடியதுமான தாவரங்கள் தான் நீடித்தகாலம் உயிரோடிருப்பவைகளாகும்.

இது நிற்க, நம்முடைய செயற்கைப் பிரயோகத்தால் விருக்ஷங்களைச் சீக்கிரத்தில் முதிர்ச்சியடைவித்து ஆயுள் குறைவுபடும்படி செய்யலாம். எவ்வாறென்னில், அவைகளுக்குக் கொத்து, எருவிடுதல், நீர்ப்பாய்ச்சல் முதலிய சாதனங்களை அடிக்கடி கையாடிவந்தால் அவைகள் சீக்கிரத்தில் முதிர்ச்சியடைந்து பட்டுப்போம். ஆகையால் விருக்ஷங்களை நீண்டகாலம் பிழைத்திருக்கச் செய்யவேண்டுமானல், அவைகளுக்கு மேற்கண்ட சாதனங்களை அடிக்கடி அனுஷ்டியாதிருத்தல் நலமாகும். கொஞ்சகாலம் சீவித்திருக்கக் கூடியவைகளை நீடித்து உயிரோடிருக்கச் செய்யவும் கூடும். அற்ப ஆயுளுடையனவாகிய (Lavender, Hyssop முதலிய) செடிகளை வருஷத்திற்கொருமுறை கிளைகளைக் கத்தரிப்பதினுல் நாற்பது வருஷகாலம் வரையில் அவைகள் சீவித்திருக்கக்கூடும். ஜீவத்தன்மை மலினமடைந்ததும் வயதுசென்றதுமான மரங்களின் அடிப்பரப்பு மண்கள் நீண்டகாலமாகக் கொத்திப் புரட்டப்படாமலிருக்கும் பட்சத்தில் அவைகளுக்குக்கொத்து முதலிய வேலைகளைச் செய்யும் பட்சத்தில் இளமையுள்ள மரங்கள் போல் திரும்பவும் மீண்டு தளிர்த்து விருத்திக்கு வரும்.

பிராணி வர்க்கத்தைப்பற்றி நாம் எற்கனவே பிரஸ்தாபித்ததில் புதிப்பித்தலை (Renovation) விட சேதம் (Consumption) ஜாஸ்தியாய் நேருகிற பிராணிகளுக்கு ஆயுள் குறைவுபடுமென்பதைத் தெரியக்காட்டியிருக்கிறோமல்லவா? தாவர வர்க்கத்தின் ஆயுளும் அதே விதியை அனுசரித்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

S. குமாரசாமி மேற்கொண்டார்.

# ஆரியர்களின் ஸங்கீதமுறை.

(201-ம் பக்கத்தொடர்ச்சி.)

அதுமாத்திரமல்ல. சில தினிசுபாட்டுக்கள் சில நாடுகளிலே மட்டும் பாடப்படுகின்றன. தமிழ்தேசத்தில் வழக்கத்திலுள்ள கும்மி நொண்டிச்சிந்து முதலிய ஸாஹித்தியங்கள் தெலுங்கு தேசத்தில் கிடையாது. அபங்கம் கேகாவளி முதலிய ஸாஹித்தியம் மகாராஷ்டிரதேசத்தில் உள்ளவைகளாம். ஸீஸபத்யம் என்பது தெலுங்குதேசத்திற்கே உரியது. இதையெல்லாம் கவனித்தால் ராகங்களுக்குப் பெயரிடுங்காலத்தில் அந்தந்த ஊர்களின் பெயருக்கும் அவைகளின் பெயருக்கும் சம்பந்தம் இருக்கவேண்டும் என்பது நிதர்சநமாய்த் தெரிகிறது. மேலும் சில ராகங்கள் சில ஜாதியாரால் பாடப்பட்டனவென்றும், அந்தந்தப் பாட்டுகளுக்கு அந்தந்த ஜாதியாரின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. எருகலகாம்போதி என்பது எருகலவாடு என்று பெயர் உள்ள வடக்கே உள்ள ஓர் சாதியாருடைய கானமாம். இந்தமாதிரி சாதியாரின் பெயர் வைக்கக்காரணம் உண்டு. ஒட்டர் முதலிய சாதியார்களை எந்த ஊரைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம்? அவர்களுக்கு ஸ்திரமான நாடு இல்லாததால் அவர்கள் பாடும்பாட்டுக்கு அவர்கள் சாதியின் பெயர் இடப்பட்டிருக்கிறது.

இப்படி ஸாஹித்திய ரூபமாய் வெகு நாளைக்கு வைத்திருந்தார்கள். பிறகு அநேகவிதமான ஸாஹித்தியங்களுக்கு ஆதாரமாகிய இந்த ராகம் என்பதைப் பாடப் பழகினார்கள். அதாவது ஒரேமாதிரியுள்ள பாட்டுகளுக்கு ஆதாரமான கானரூபத்தை ஆகாரமாகப் பாடி அவைகளுக்கு ராகம் என்று பெயர் வைத்தார்கள். இந்த ராகம் என்பது கீதமும் அல்ல, கீர்த்தநமும் அல்ல. இது இன்னது தான் என்று சொல்லிக் காட்டமுடியாமலிருக்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதல் காரணம் என்னவென்றால், அது சத்தரூபமாய்

இருப்பதால் அதை இன்னது தான் என்று சுட்டிக்காட்ட முடியவில்லை. இரண்டாவது உபமானத்தை உபயோகித்துக் காட்டவேணும் என்றால் வேறொரு ஸம்பிரதாயங்களிலும் இந்த மாதிரி விஷயம் இல்லாமலிருக்கிறது. பிராமணர்களது வழக்கத்திலுள்ள ஆசமனம் என்னும் வழக்கத்தை வெள்ளைக் காரருக்குப் போதிப்பது எப்படிக் கொஞ்சம் முடியாத காரியமோ அதுபோலவே, இதை ஒரு உபமானத்தால் காட்ட முடியாமலிருக்கிறது. ஆகிலும் ஏதோ ஒருவிதமான உபமானத்தைச் சொல்வோம்—ஒரு விநாயகசதுர்த்தி உத்ஸவ காலத்தில் எல்லா ஜனங்களும் விநாயகர் பிம்பம் வேண்டும் என்று ஒரு குயவனைக் கேட்டால் அவன் தன் சிற்றறிவுக்கு ஏற்றபடி மண்ணைப் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டு, வெறும் மண்ணாலோ, அல்லது குருநாதப்பட்டையையும் உபயோகப்படுத்திக்கொண்டோ, அல்லது வேறு எந்தவிதமான வர்ணங்களை உபயோகித்துக்கொண்டோ பிம்பங்கள் தயார் செய்து கொடுக்கிறானல்லவா ? அதேபிரகாரமாய் ராகம் என்கிற அச்சை உபயோகித்துக்கொண்டு தெலுங்கு பாஷையில் ஸாஹித்தியம் செய்கிறவர் சிலர். தமிழ் பாஷையில் ஸாஹித்யம் செய்வார் சிலர். இப்படி அநேகவிதமான ஸாஹித்தியங்கள் செய்யப்படுகிறதற்கு ஆதாரபூதமானது ராகம் என்று சொல்லப்படும். அது கீதமுமல்லாமல் வர்ணமுமல்லாமல், கீர்த்தனமுமல்லாமல் ஜாவளியுமல்லாமல், பதமுமல்லாமல், இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமானதாய் ஒருவித சத்த ரூபமாயுள்ளதே.

இது ஆதாரமாயுள்ள ஒரு அநிர்வசநீயமான சத்தரூபமாதலால் இதை அறிகிறதற்கு நம்காதையே உபகரணமாய் உபயோகிக்கவேண்டியதாயிருக்கிறது. ஸ்வர விஷயத்தை நன்றாய் உணரக்கூடிய புலன்களில்லாதவர்க்கு இது அறியக்கூடிய விஷயம் அல்ல. இதைப்பாடுவதில்: குற்றங் குறைகளுண்டானால் குறிப்பிட்டுக்காட்ட முடியாமல் போகும்.

மேலும் ராகம் என்னும் ஆதாரம் அறிய முதல் முதல் ஸாஹித்தியங்களை அறிந்து கொள்ளவேண்டும். அந்தமார்க்

கத்தால்தான் நாம் ராகத்தை அறியவேண்டும் என்பதற்குக் காரணம் என்னவென்றால், ராகம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் ஏதாவது ஒரு ஸாஹித்யத்தை நினைவில் வைத்துக்கொண்டு அது எந்த ராகத்தில் பாடப்பட்டுள்ளதோ அதே மாதிரியாய்ப் பாடப்படுவதையெல்லாம் அந்த ராகம் என்று கண்டறிகிறது வழக்கத்தில் இருக்கிறது என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம்.

இது நிற்க, ஸங்கீத புஸ்தகங்களில் ஏற்பட்டிருக்கிற இவ்வளவு ராகங்களும் ஆதிகாலந்தொட்டு வழக்கத்திலிருந்தனவல்லவென்று யாரும் கண்டறிந்து கொள்ளலாம். எப்படி கரஹரப்ரியா என்றும் ஹரிகாம்போதி என்றும் மற்றும் விதம் விதமான வழக்கத்தில் இல்லாத கர்த்தாராகங்களும், ஸரஸ்வதி யென்றும் ஸரஸ்வதிமனோஹரி யென்றும் பலவிதமான ஜந்யராகங்களும் ஸ்ரீ தியாகராஜய்யர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளனவோ, அது போலவே வேறு வேறு முந்திய வித்வான்கள் தந்தருளியிருக்கிறார்கள் என்பதில் ஸந்தேகம் இல்லை. இப்படி தியாகய்யர் அவர்கள் பாடியதும், மற்றும் அபூர்வ ராகங்களில் பாடியிருக்கிற வித்துவான்கள் பாடியதும் எல்லாம் சேர்ந்து சுமார் முந்நூறு ராகங்களில் அமைந்த ஸாஹித்யங்களேயென்று நன்றாய்த்தெரிகிறது. புஸ்தகங்களிலோ ஆயிரராகங்கள் பிரஸ்தரித்தெழுதப்பட்டிருக்கின்றன.

பிரஸ்தரித்து எழுதும் விதிகள் என்னவென்றால் ஷாடவம் (6 ஸ்வரம்) என்றும், ஔடவம் (5 ஸ்வரம்) என்றும் இரண்டு விதமான ஆரோஹண அவரோஹணங்களில் வர்ஜ்யமுள்ள ராகங்களாம். இந்தப்பிரகாரம் பிரஸ்தரிக்கும் காலத்தில் அநேகராகங்கள் ஏற்படும்.

இது தவிர, வக்ரம் என்று ஒரு விஷயம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது ஸகரிகமப என்பதில் க வக்ரமாம். இதே மாதிரி எல்லா ஸ்வரங்களையும் வக்ரமாக வைத்துக்கொண்டாவது சில ஸ்வரங்களைமட்டும் வக்ரமாய் வைத்துக்கொண்டாவது, அல்லது ஆரோஹணத்தில் மட்டும் வக்ரம் வைத்துக்

கொண்டாவது, அவரோஹணத்தில் மட்டும் வக்ரம் வைத்துக் கொண்டாவது அநேக ராகங்கள் ஜந்யமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிக் கணக்குக்கு ஆயிரம் ஆயிரமாக ராகங்கள் இருந்தாலும், புஸ்தகங்களில் சுமார் ஆயிரம் ராகங்களுக்குமட்டுமே ஆரோஹணம் அவரோஹணம் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆயிரம் ராகங்களுக்கும் ஆதாரம் என்னவென்று விசாரிப்போமாகில் வேங்கடமகி என்பவரால் ஏற்படுத்தியுள்ள லக்ஷணகீதமன்றி, இன்னார் இயற்றியவர் என்று தெரியாத வேறொரு லக்ஷணகீத புஸ்தகம் ஒன்றில் ஏற்பட்டிருக்கிற ராக வரிசைகளை அநுஸரித்த ஒரு அட்டவணைபோலிருக்கிறது. இது மாத்திரமல்ல. இந்த மாதிரி இன்னொரு லக்ஷணகீத் கிரந்தமும் இருக்கிறது. அதாவது லக்ஷணகீதம் என்று பெயருள்ள மூன்று புஸ்தகங்கள் இருக்கின்றன. வெங்கடமகி இயற்றியது ஒன்றும் மற்று இரண்டும் ஆக மூன்று லக்ஷணகீதம் எழுதப்பட்டிருக்கிற விதம் என்னவென்றால், ஏதாவது ஒரு மேளகர்த்தாவை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு அதில் ஜந்யமாகும் ராகங்களையும் அந்தந்த ராகத்தில் ஒரு கீதம் ஒன்றையும் எழுதப்பட்டிருக்கிறது. (கீதம் என்னும் ஸாஹித்யத்துக்கு ஸாஹித்ய லக்ஷணங்கள் எழுதும்போது விஸ்தரித்து எழுதப்படும்.) முதல் முதல் பாட்டை ஸ்வரங்களாக எழுதுவது என்னும் வழக்கம் அந்த கிரந்தத்தில் தான் ஏற்பட்டுள்ளது. அதாவது நோடேஷன் (Notation) என்பது முதல் முதல் ஏற்பட்டிருப்பது அதில் தான். அந்தப்புஸ்தகங்களில் கூட சுமார் மூந்நூறு ராகங்கள் தான் ஏற்பட்டிருக்கின்றன. அதுகொண்டு இந்த ஆரோஹண அவரோஹணங்களைக் காட்டும் ஸம்பிரதாய புஸ்தகங்களுக்கு ஆதாரம் இன்னது தான் என்பது தெரியாமலிருக்கிறது.

(இன்னும் வரும்.)

**P. S. ஸுந்தரம் அய்யர், B. A., L. T.**

---

# பூகம்பமும் எரிமலையும்.

(207-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேற்சொன்ன 16-வருஷங்கள் பூகம்பம் நேரிட்டபிறகு கி. பி. 79-ல் அம்மலை கற்குழம்பைக் கக்க ஆரம்பித்தது. அந்தக் காக்ஷியை இளைய பிளினி (Pliny) என்பவர் தமது நண்பராகிய டாஸிடஸ் (Tacitus) என்பவருக்கு எழுதிய இரண்டு கடிதங்களால் நன்கு விளக்கியிருக்கிறார். மூத்த பிளினி அப்போது மிஸ்ஸீனியம் என்னுந் துறைமுகப்பட்டணத்திலிருந்த ரோமாபுரி கப்பற்படைக்குத் தலைவராக இருந்தார். அதே வருஷம் ஆகஸ்டுமீ 24உ அந்த மலையின்மேல் ஒரு பெரிய மேகபடலம் சூழ்ந்து சுற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர் வெகுதொலையில் இருந்தபடியால் அக்காக்ஷி அவருக்கு ஒரு பெரிய தேவதாருவி (Pine) னுருவம்போல் புலப்பட்டது. அம்மாதிரியான மேகத்தோற்றம் விசுவியஸ் எரிமலை கற்குழம்பைக் கக்குங் காலங்களில் காணப்படுகிறதென்று அனேகர் சொல்லுகிறார்கள். கல்லும் சாம்பலுங்கலந்த ஒரு பெரிய நீராவி ஸ்தம்பம் அம்மலையின் கிரேட்டரினின்று சுமார் 1000 அல்லது 1200 அடிகளுக்குமேல் செங்குத்தாகக் கிளம்பி மேகபடலம்போல் அநேக மயில் விஸ்தீரணம் பரவிக் கற்களையும் சாம்பலையும் நாலாபக்கங்களிலும் மழைபோல் சொரிந்தது. இம்மாதிரியான காக்ஷியைக்காண ஆசைகொண்டு மூத்த பிளினி என்பவர் விசுவியஸ் மலைக்குப் பத்துமயில் தூரத்திலுள்ள ஸ்டெபி என்னும் பட்டணத்திற்குப் போனதால் அவர் உயிரிழக்கும்படி நேரிட்டது. மிஸ்ஸீனியம் என்னும் பட்டணத்தில் தங்கிய மூத்தபிளினியின் மருமகன் மேற்கண்ட காக்ஷிப்பிரமாணத்தால், சாம்பல் மாரியும், மலையினின்றும் செங்குத்தாக வீசப்படுகிற பெரிய சிவந்த கற்களின் மிகுதியும், தரையின் பரப்பு மிகுதலும், கடல் பின்னடைதலும் ஆகிய இவை போன்ற வேறு பல தோற்றங்களும் பூகம்பமுதிர்ச்சியால் நேரிடுகின்ற எரிமலைகளின் குணாதிசயங்கள் ஆகும் என்று வருணித்திருக்கிறார். அம்மலையினின்றும் 10 அல்லது 15-மயிலுக்கு அப்புறங்களிலுள்ள பாம்பி, ஹெர்குலேனியம், ஸ்டெபி என்னும் பட்டணங்கள் அதன் சாம்பலாலும், கற்குழம்பின் சகதியாலும் 30 அடி கனத்திற்குப் புதைக்கப்பட்டதென்றால் அம்மலையின் கிரேட்டர் வழியாய்

வெளியேறிய சாம்பல், கற்குழம்பு இவைகளின் ஓர் அளவு இவ்வளவென்று ஊகித்துக்கொள்ளுங்கள். சிற்சில சமயங்களில் அம்மலை கற்குழம்பைக் கக்காமல் நின்றுவிட்டதாயினும் அதனால் அது முற்றிலும் அடங்கிவிட்டதென்று நினைக்க இடமில்லை. ஏனெனில் இவ்வருஷாரம்பத்திலும் ஒருமுறை கக்கியது. பிறகு சற்று அடங்கியதுபோல் தோற்றியது. இப்பொழுது கொஞ்சநாளாய் விடாமல் கற்குழம்பைக் கக்கிக்கொண்டு வருகிறபடியால் அம்மலையின் சுற்றுக்குக் காதவழியிலுள்ளவர்களுக்குப் பெரும் பீதியை உண்டுபண்ணுகின்றது. அம்மலை கற்குழம்பைக் கக்குங் காக்ஷியைப் பார்ப்பதற்காக ஐரோப்பாவிலுள்ள இத்தாலி தேசத்தவர்களும் இதர நாட்டார்களும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்களென்று மெயில் பத்திரிகை கூறியது. கி. பி. 79ல் அம்மலை கற்குழம்பைக் கக்கியதில் அதன் தென்மேற்கிலிருந்த ஒரு பெரிய கிரேட்டர் பாதி தகர்ந்து சரிந்தது. அதுமுதல் இதுவரையிலும் அதின் சிகரம் பாதிவட்டமாகவே இருக்கிறது. அதற்கு மாண்டிஸோமா (Monte Somma) என்று பெயர்.

எரிமலையின் தொகுதிகள் கடலோரத்தில் இருக்குமாயின் அவைகள் கற்குழம்பைக் கக்குங்காலங்களில் உருகிய வஸ்துக்கள் காற்றால் மோதப்பட்டுக் கடலில் விழும். இம்மாதிரியாகச் சமுத்திரத்தில் அழி பொருள்கள் வீழ்வதால் அவ்வஸ்துக்கள் கடலெங்கும் பரவுகின்றன. சமுத்திர நீரினால் உண்டாகும் அழிபொருள்களும் பூமியின்கீழ் உண்டாகி மேன்மேலும் வெளியேற்றப்பட்ட அழிபொருள்களும் ஒன்று சேர்ந்து ஓர்வித வண்டற்றன்மையை அடைந்து சமுத்திரப் பரப்பின் அடிப்பாகமெல்லாம் படிகின்றன. சில சமயங்களில் சமுத்திரத்தினடியிலுள்ள எரிமலைகள் கற்குழம்பைக் கக்கும். அப்படிக் கக்கும்போது அக்கற்குழம்புகள் இப்பிமீன்களின் ஓடுகளோடும் மற்றுமுள்ள அங்கக்கட்டுகளோடும் மேலே கொண்டுவரப்படும். சமுத்திரத்திலுள்ள எரிமலைகள் கற்குழம்பைக் கக்குவதினால் கடலிலுள்ள பொருள்களும் சமுத்திர நீரினால் குளிர்ச்சியடைந்த கற்குழம்புகளும் அடுக்கடுக்காக ஒன்றின்மேலொன்றாக அமைந்து ஒரு பெரிய நிலபாகமாகி நீர்மட்டத்திற்கு மேற்கிளம்பி ஓர் பெரிய தீவாகப் புலப்படும். இதற்கோர் திருஷ்டாந்தமாக மத்தியதரைக்

கடலில் சிஸிலித் தீவிற்கும் ஆப்பிரிக்காக்கண்டத்திற்கும் இடையில் 1831ளூ த்தில் திடீரென்று ஒரு தீவு உண்டான தாகவும் அதற்கு அட்மிரல்ஸ்மித் (Admiral Smyth) என்பவர் கிரேஹாம் (Grahan ) தீவு என்று பெயரிட்டதாக வும் தெரியவருகிறது. அத்தீவு உண்டாவதற்குமுன் அவ் விடத்தில் நீரின் ஆழம் 600 அடிக்கதிகம் இருந்ததாக அறிந் திருக்கிறார்கள். அவ்விடத்தில் நீர்மட்டத்திற்கு 600 அடிக் குக் கீழ்ப்பட்டிருந்த எரிமலையின் கற்குழம்பால் ஆகிய அத்தீவு 800 அடி கனமுள்ளதாக இருக்கக்கண்டார்கள். அது எப் படி அறிந்தார்களெனில் அத்தீவு சமுத்திர நீர்மட்டத்திற்கு மேல் 200 அடி உயர்ந்திருந்ததினாலும், சமுத்திர நீர்மட்டத் திற்குக் கீழ் 600 அடி பொருந்தி யிருப்பதினாலும் ஊகித்தறிந் தார்கள். அத்தீவு நீர்மட்டத்திற்கு மேலே 200 அடி உயர் மாயும் மூன்றுமைல் சுற்றளவுள்ளதாயும் புலப்பட்டது. அது மூன்றுமாதம் அப்படித் தங்கியபிறகு இருந்த இடம் தெரியா மல் மறைந்துவிட்டது. ஜப்பானியர்களுக்கு அவர் தீவுகளுக் குச் சமீபத்தில் ஒரு தீவு உண்டானதென்றும், அதில் அவர் கள் கொடியை நாட்டி அதற்கு நுஷீமா என்று பெயரிட்டார் கள் என்றும் முன்னொரு சஞ்சிகையில் கூறினோம். அதுவும் மேற்சொன்ன கிரேஹாம் தீவைப்போல் மாயமாய் வந்தது போல் மறைந்துவிட்டதென்றும் வதந்தி.

உருகிய வஸ்துக்களாகிய கற்குழம்பு எரிமலையின் கிரேட் டர் வழியாக அதிவேகமாகத் தள்ளப்படுவதற்கு முக்கிய ஏது பூமிக்குள் உள்ள கற்பாறைகள் உருகிய காலத்தில் அதிலிட னிருந்து ஆவிரூபமடைந்த நீரே. அந்த நீராவி அக்கற் குழம்புடன் பொருந்தியிருந்து வெளிவர வழி உண்டான போது அதை அதிவேகமாக வெளியேற்றுவதுடன் கற் குழம்பைச் சிதறும்படியும் செய்கின்றது. எரிமலைகள் கற் குழம்பை அதிவேகமாகக் கக்குவதற்கு இந்த ஒரு முகாந் தரந்தவிர வேறு காரணங்களும் உண்டோவென்று அறிய ஏன்றால் இயலவில்லை. பூமியின் உட்பிரதேசத்திலுள்ள வஸ் துக்கள் உருகுவதற்குப் பலர் பலவித அபிப்பிராயங்கள் கொ ண்டிருக்கிறார்கள். சிலர் பூமியின்கணுள்ள வஸ்துக்கள் ரசா யன சேர்க்கை யினமைவால் உருகுகின்றனவென்றும், வேறு சிலர் பூத பௌதிக வேறுபாட்டால் ஆகியதென்றும், மற்றுஞ்

சிலர் பூமியானது உருகிய தன்மையில் ஓர் காலத்திலிருந்ததென்றும், அது நாளடைவில் உஷ்ணம் குறைந்து மேற்புறம் குளிர்ந்து இறுகியதால் அதன் உட்புறத்தில் அந்த சேஷம் கொஞ்சம் இருப்பதாகவும் அதுதான் பூமியின் உட்புறத்தின் உஷ்ணத்திற்கும் எரிமலை கற்குழம்பைக் கக்குவதற்குங் காரணமென்றும் சொல்லுகிறார்கள். மேலே சொன்ன காரணங்களில் எவ்வித காரணத்தால் அமைந்திருப்பினும் சரி, பூமியின் உட்புறத்தில் உஷ்ணம் உண்டென்பது திண்ணம்.

பூமிக்குள் உஷ்ணம் உண்டென்பதைப் பின்வரும் சோதனையால் அறியலாம். நமது இல்லங்களில் யாராவது சுரத்தினால் பீடிக்கப்பட்டிருக்கும்போது ஆங்கில வைத்தியர்களை அழைத்து வியாதியின் கூறை அறியச்சொன்னால் அவர்கள் முதலில் அவ்வியாதியஸ்தருக்கு உள்ள சுரம் இவ்வளவென்று அறிய நம் நாட்டு வைத்தியர்கள்போல் தாதுவைப் பிடித்துப் பார்க்காமல் நாவிலாவது அல்லது கைச்சந்திலாவது தாம் கொண்டுவந்திருக்குஞ் சிறிய கருவியை வைத்துச் சில நிமிஷங்கள் சென்றபிறகு அதை உற்றுப்பார்த்து 102, 103 டிகிரி என்று சொல்லுகிறார்கள். அக்கருவிக்கு உஷ்ணத்தின் அளவறியுங் கருவி (Thermometer) என்று பெயர். அக்கருவியை பூமியின் மேற்புறத்தில் 4 அல்லது 5 அங்குலத்திற்குள் புதைத்தால் பூமியின் வெளிப்புறம் எவ்வித மாறுபாட்டை அடைகின்றதோ அதற்கிணங்க அது நமக்கு அறிவிக்கின்றது. இரவில் பூமியின்புறம் குளிர்ச்சியடைவதால் அக்கருவியின் கணுள்ள பாதரசம் குறைந்தும், பகலில் பூமி அதிக உஷ்ணமடைவதால் அக்கருவியின் கணுள்ள ரசம் அதிகமாக உயர்ந்தும் காட்டுகின்றது. இதேமாதிரியாக மாரிகாலத்தில் குறைந்தும் வேனிற்காலத்தில் அதிகரித்தும் நிற்கின்றது. பூமியின்கீழ் கொஞ்சம் ஆழத்தில் உள்ள நிலவறையில் அக்கருவியை வைத்திருந்தால் கால மாறுபாட்டுக்குத் தக்க மாறுபாட்டைக் காட்டாமல் ஒரேவித சீதோஷ்ண ஸ்திதியைக் காட்டுகின்றது. மிக ஆழமாயிருக்கிற சுரங்கங்களின் கீழே போகப் போக உஷ்ணம் அதிகப்படுகின்றது. சுரங்கங்களில் வேலை செய்கிறவர்கள் மிகவெப்பத்தால் தங்கள் ஆடைகளைக் களைந்து விடுகிறார்கள். இங்கிலாந்திலுள்ள சுரங்கங்களில் மிக ஆழ்ந்த சுரங்கம் விகான் (Wigan) என்னும் நகரின் அருகிலுள்ள

ரோஸ் பிரிட்ஜ் (Rosebridge) என்னும் சுரங்கமே. அது 2445 அடி ஆழமுள்ளது. அதை வெட்டுங்காலத்தில் பூமியின் உட்புறத்தின் சீதோஷ்ணஸ்திதியை அறிய அப்போது செய்த பரிசோதனையால் ஒவ்வொரு 50 அடி ஆழத்திற்கும் பாரன்ஹீட் கண்டுபிடித்த உஷ்ண அளவு அறியுங் கருவியின்படி ஒரு டிகிரி அதிகமாவதாகக் கண்டார்கள். இன்னும் வேறு சில சுரங்கங்கள் வெட்டும்போது செய்த சோதனையால் 75 அடிக்கு ஒரு டிகிரி அதிகப்படுவதாகவும் கண்டார்கள். இம்மாறுபாட்டிற்குக் காரணம் வெட்டிய பாறையின் தன்மையால் மாறுபட்டதென்றும், மேலும் அச்சுரங்கங்கள் செங்குத்தாகச் செல்லாமல் சாய்ந்து சென்றதனுல் என்றும் அறிந்தார்கள். பல விடங்களில் எடுத்த கணக்குகளைக்கொண்டு சராசரி பார்த்தில் ஒவ்வொரு 60 அடி ஆழத்திற்கும் ஒரு டிகிரி அதிகப்படுகிறதென்று நிதானித்து அறிந்திருக்கிறுர்கள்.

(இன்னும் வரும்).

**K. இராமாநுஜ ஐயங்கார்.**

---

# விண்ணன் சரித்திரம்.

## முகவுரை.

பூவுலகில் சிறப்புமிக்கோங்கிய காவிரி நாட்டில் பண்டைக் காலந்தொடங்கி அனேகம் பிரபுக்களும் சோழமன்னர்க்குக் காவல் புரியுஞ் சிற்றரசர்களும் மிக்க கொடையாளிகளாயிருந்ததாகப் பற்பல நூல்களாலும் கர்ணபரம்பரையாலும் அறியப்படுதலில் இப்பொழுது கிடைத்தவரையிலுள்ள ஆராய்ச்சியாலறியப்படுவோர் பலருளர்; அவராவார்:—"மத்தி, எருமையூர் கிழான், விண்ணன், வேளூர் கிழான், மைந்தன், அன்னி, பண்ணன், திதியன், இளங்கோஎன், சடையன், சோமன்" என்பவர்களும் பிறருமாம். அவருள் விண்ணன் சரித்திரம் யாவர்க்கும் வியப்பைத் தருவதுடன் அவன் பெயரால்வெட்டிவழங்கப்பெற்று வருகிற விண்ணாறு (விண்ணனூறு) இந்நாட்

டில் எங்கும் பரவிப்பாய்ந்து வருஷந்தோறும் பற்பலகோடி ஜீவராசிகளைத் தாய்போலக் காக்குந்தன்மையதாதலின் அந்த ஆற்றை வெட்டுவித்த காரணத்துடன் அவன் சரித்திரத்தையும் ஒருவாறு தொகுத்து வெளியிடவேண்டுமென்றெண்ணி என் சிற்றறிவிற் கெட்டியவாறு எழுதுகிறேன்.

இவ்விண்ணன் சரித்திரத்தை மாற்றிப் பிறர் மேலேற்றிக் கூறுவாருமுளர்! அப்படி அவர்கள் சொல்லுவதற்கு இற்றைக்குச் சிலநாள் முன்பு அன்னிய நாட்டிலுள்ள ஒரு கவிஞர் ஆராய்ந்தெழுதாமல் தோற்றியவாறே ஒரு கவியை யெழுதி வைத்துப்போயினர். அது சாட்சியாகாதென்பதையும் இதற்குரிய ஆதாரத்தையும் இச்சரித்திரத்தின் கடைசியில் எடுத்துக்காட்டுகிறேன்.

இக்காலத்திலுள்ள சரித ஆராய்ச்சியுடையார்க்கு இதுவுமொருபயன் தரவல்லதேயாகும் போலும்.

கல்வியறிவுடைய சான்றோர்கள் யானெழுதுவதில் பிழைகள் விரவியிருப்பினும் வெகுளாமலேற்றுக்கொள்ளவேண்டுகிறேன். இனிச் சரித்திரம் வருமாறு:—

பூவினுட் பதுமம் போலும் புருடருட் டிருமால் போலுங்
காவினுட் கற்பம் போலுங் கலைகளுண் ஞானம் போலும்
ஆவினுட் சுரரான் போலு மறத்துளில் லறமே போலு
நாவினுண் மெய்ந்நாப்போலு நாட்டினுட் சோழ நாடு.

என்று ஆன்றோர் கூறியவாறு சிறப்புடையதாய்ப் பற்பலவளங்களும் செறிந்து செழிப்புற்று விளங்கி வருகிற சோழநாட்டில் பண்டைக்காலந்தொடங்கி உறையூரிலிருந்து அரசாண்டுவந்த சோழமன்னருள் பராந்தகச் சோழன் காலத்தில் உறையூரில் மண்மாரி பெய்து அவ்வூரை நாசஞ் செய்துவிட்டமையின் அவன் மகனாகிய இரண்டாங் கரிகாலன் காலம் முதலாக இத் தஞ்சாவூரில் கோட்டை கட்டத் தொடங்கி நான்கு தலைமுறை வரையில் கட்டிமுடித்து "நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ நிறைநெடு மங்கல நாணோ" என்று சொல்லும்படி அலங்கரித்துச் சிறந்ததோர் நகரமாக்கியபின் இதனிலிருந்தே பரம்பரையாக அந்தச் சோழ மன்னர்கள் அரசுபுரிந்து வந்தார்கள்; அக்காலத்தில் இவ்விராஜதானி மிகுந்த உன்னத தசையிலிருந்தது;

"எழுமத நிறுவி மோரைர் திரண்டுகுற் றமுங்க டிந்து
தழுவியை யிருவ னப்பு முத்திசாற் றியவெண் ணன்கு
மொழுதுகாண் டிகைவிருந்தி யுறுமுறை மாணுக் கர்க்குச்
செழுமையி னியல்கேட் பிபபோர் கழகமுஞ்செறிந்த (1)
கவியொரு கவியி னேடுங் கமககனோர்கமக னேடு [தாங்கண்
மவிதலில் சிறப்பின் வாதி பமைந்தவோர் வாதி யோடும்
புவிபுகழ் வாக்கி மேன்மேற் பொலியுமோர் வாக்கி யோடுஞ்
செவியுற வமர்ந்த ளாவுங் கழகமுஞ் செறிந்த தாங்கண் (2)
அடைந்தவர் தரந்தெரிந்தா கமம்புகல் சமய மாதி
மிடைந்தமுத் தீக்கை யாற்றி நான்கினும் விராவ வுய்த்துத்
தடைந்தவைம் பாச ராக்கித் தனிமுதற் கலப்பா யின்பங்
குடைந்தவ ராகச் செய்யுங் குரவர்வா ழிடமும் பல்ல.'' (3)

என்றபடி நகரத்தின் எவ்விடத்தும் கல்வியறிவொழுக்கங்களால் சிறந்த பெரியோர்களும் வித்துவான்களும் நிரம்பியிருந்து வரப்பெற்றது மன்றித்,

"திறையின் முறைகொணர்ந்த தெவ்வேந்த ரெல்லா
மிறையு மிறைகடக்க லாகா—வறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போர்வாளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு'' என்னும் பாடலைப் *

பொய்யாமொழிய தாக்கி இதிலிருந்து அரசாளுகிற சோழமன்னர்களால் முறிய அடிக்கப்பட்டுச் சரண்புகுந்த பகையரசர்கள் திறைகொடுத்துப் பணிந்து வரப்பெற்ற ஒரு பெருஞ்சிறப்பு நிரம்பப் பெற்றுடையதாயிற்று. இவ்வளவு மேன்மையுற்றுக் குபேரபட்டணம் போல விளங்கியதோடு,

"அளகையென்பது மிகுபொருளுடையதே யானும்
பளகறப்பகுத் தீதரா மையினுவர்ப் பரவை
தளர்விலா நிதி படைத்த விந்நகரஞ் சார்ந்தோர்க்கு
வளநிலாவுறக் கொடுத்தலால் வயங்குபாற் புணரி.''

என்றபடி கொடைத்தன்மையாலுஞ் சிறந்ததனல் உலகத்தில் யாவரும் இதுவே அளகாபுரி யென்று பெயரிட்டனர்; அது முதல் இது ‡ அளகாபுரி யென்று பெயராயிற்று. இத்

---

* இது பொய்யா மொழியார் சீனக்கருக்குப் பாடிக்கொடுத்தது.

‡ கோட்டை கட்டி அளகாபுரி யென்று பெயரிட்டு வழங்கி வந்ததாகவும் பிற்பட்டுத் தஞ்சாவூரென்று பெயரிட்டதாகவும் தெரிகிறது! முதலது உவமையாகுபெயராக இட்டிருக்கலாம்; பின்னதற்குக் காரணம் புலப்படவில்லை.

தஞ்சைய நகரத்திருந்து அரசாண்டு வருகிற சோழவமிசத்தில் சிலதலைமுறைக்குப் பின் ஒரு அரசன் தோன்றி அரசாட்சியைக் கைக்கொண்டு நிரம்பிய கல்வியிலனுகிக், காமமே தலையெடுப்புண்டு அதற்குரிய நட்பாளரைக் கூட்டித்தன் அவைக் களத்தை அலங்கரித்து அந்தவழியே ஒழுகுவானுயினன். அரசன் இங்ஙனம் நிலை தவறினமையால் அறிவுடையோ ரெல்லாரும் வெறுப்புற்று ஆங்காங்குத் தமக்குத் தோற்றிய இடங்களுக்கு அகன்று போயினர்; அக்காலத்தில்

> "பிரம்பைக் கரம்பற்றிப் பின்னியந்தக் கூடை
> நிரம்பக் கவியை நிரப்பிச்—சிரம்பற்றிக்
> கற்றூரில் தஞ்சைக் கடைத்தெருவெ லாங்கூறி
> விற்றாலும் போமோ விலைக்கு."

என்று (பிற்காலத்தில்) காளமேகனர் கூறியவாறே ஒளி குறைந்து கல்வி கேள்வியுடையார் யாருமின்றித் தாழ்வுற்று,

> "நிறந்தலை மயங்க வெம்பி நெடுங்கடல் சுடுவதாயின்
> இறந்தலை பெருநீர் வாழு முயிர்க்கிட ரெல்லை யுண்டோ
> மறந்தலை மயங்கு செவ்வேன் மன்னவன் வெய்ய னாயின்
> அறந்தலை மயங்கி வைய மரும்பட ருழக்கு மன்றே,"

என்றபடி ஏனையோர் யாவரு மேங்கிப்புலம்ப அமைச்சரும் பிறரும் அந்தணாளரும் தந்திரத் தலைவரும் தருமநூற் புலவரும் ஏனையறிஞரும் ஏகிய பின்பு விடரும் தூர்த்தரும் வெவ்வினைக் கொடியரும் வம்பப் பரத்தையரும் வறுமொழியாளரும் கட்குடியாளரும் கணிகையர் கூட்டமும் உட்பிரியாம லுவந்துறையப் பெற்றுக், கண்டோர் யாரும் மனங்கரைந்துருகிப் பரிதபிக்குந் தன்மையிலிருந்தது; அக்காலத்தில் இந்நகரத் தருகிலுள்ள * சிறு குக்கிராமத்தி லுறைபவனும் வேளாளர் மரபிற் பிறந்து உழுது பயிரிட்டுண்பவனும் சிறிது தமிழ்க் கல்வி யுள்ளவனும் நல்லியற்கை யுடையவனுமாகிய "விண்ணன்" என்னுமோர் வேளாளன் தனக்குரிய நிலத்தில் ஒரு தோட்டம் அமைத்துப் பற்பல கறிகாய் வகைகள் சாகுபடி செய்து அவற்றை இந்நகரத்திற் கொண்டுவந்து விற்றுச் சீவனஞ்செய்து வந்தனன்; இப்படி நிகழு நாளில் ஒருநாள்

---

* இத்தஞ்சை நகரத்தின் தென்றிசையிலுள்ள நாட்டுச்சாலையென்ற வூரெனவு முரைப்பர்.

வைகறைத் துயிலெழுந்து ஒரு பெருங்கூடை நிரம்ப வெள்ளரிப்பிஞ்சு (பிற கறிகளுமென்பார்கள்) பறித்து எடுத்துக் கொண்டு இவ்வூரிற் புகுந்து ஒரு தெருவில் விலை கூறினன்; அங்ஙனம் விலைகூறி அத்தெருவி லோரிடத்தில் கூடையை இறக்கிவைத்த அளவில், அத்தெருவிலுள்ள பலரும் வந்து தங்கட்கு வேண்டுவனவற்றை யெடுத்துக்கொண்டு அவற்றிற் குரிய விலைப்பொருளைச் சிலர் கொடுக்கச் சிலர் தருவதாகக் கூறித் தத்தம் வீட்டிற்குச் சென்றனர்; பின்பு விண்ணன் தான் நேரில் சென்று, முன் வாங்கிக்கொண்டுபோனவர்கள் வீடுகள் தோறும் போய் அவ்வவ் விலைக்காசினைக்கேட்டு வாங்கும்பொழுது ஒரு வீட்டின் தலைவன் இவ்விண்ணனுடன் யாதோ தர்க்கிக்க அதன் நிமித்தமாக இருவருக்கும் வாக்கு வாதம் அதிகரித்தது; அப்பொழுது அவ்வீட்டின் தலைவன் அதிகச்சினங்கொண்டு இவ்விண்ணன்மேற் பாய்ந்து வாய்வழி குருதி சோரக்குத்தி நைய அடித்து வெளியிற் றள்ளிவிட்டனன்; பண்டமு மிழந்து அடியும் பட்டு வருந்துற் றுழலும் விண்ணன் பெருங்கூச்சலிட்டுக் கதறியும் ஒருவரேனும் இரங்கி ஆதரித்தாரில்லை; இவன் மெய்வருந்தி அரிதில் அங்கு நின்றெழுந்து "ஊரீர் முறையோ! சேரியீர் முறையோ! அம்பலத்திருக்கும் அறிஞர்காள் முறையோ! காவற்சேவகங் கைக்கொள்வீர் முறையோ!" என்று தெருத்தொறுஞ் சென்று திரிந்து புலம்பியும் தன் னெதிர்ப்பட்டோரைத்தான் பணிந்துரைத்தும் அழுதும் அரற்றியும் அவலித்துப் புலம்பியும் புழுதியிற் புரண்டும் பொருமி நொந்துரைத்தும், யாரும் கேட்டாருமில்லை; இங்ஙனமாக அற்றைநா ளங்கு வருந்திக்கிடந்து மெல்ல வீடுவந்து சேர்ந்து சிறிது மெய்வருத்தம் நீங்கி அடிபட்ட புண்களு மாறியபின் இங்ஙனம் அடித்ததற்குக் கேட்டற் குரிய நியாய ஸ்தலமில்லாமற் போயிற்றே; இப்படிக்கேட்பாரை யில்லாமையானது அரசனது செங்கோலொழுங் கின்மையாலன்றோ? இவ்விராஜதானியில் நாம் யாதுசெய்தாலும் இப்படியே கேட்பாரிலர் போலும்; ஆதலால் நாம் யாதேனும் ஒன்றனைச் செய்வோமென்று ஒரு வழியாகத் தேறுதலடைந்து மீண்டும் இந்நகரத்திற்கு வந்து இதன் வடக்குவாயிலருகே ஒரு கொட்டகை போட்டு அவ்விடத்தில்தான் அரசன் கட்டளையைப் பெற்றுச் சுங்கம் வாங்குகிற உத்தியோக

முடையவனென்று கூறி அதற்குரிய அங்கங்களை அழைத்துக் கொண்டு அதில் தங்கி அன்றுமுதல் இந்நகரத்திலிருந்து இறந்துபோய் * அவ்வாசலின் வழியே வருகிற பிணங்களுக்குப் பிணம் ஒன்றுக்கு ஐந்துபணம் வீதம் வரி நியமித்து வாங்கிக்கொண்டு அவ்விடத்திலேயே வஸித்து வந்தனன்; இவ்வரி பிணத்துக்குரிய வரியெனவே, பிரேதம் போகும்பொழுது தடைப்பட்டு நின்றால் அப்பிணத்துக்குரிய பரம்பரையார்க்கேனும் அல்லது அதன் தெரு அல்லது அப்பட்டணத்துக்கேனும் ஒரு ஊறுபாடு நிகழுமென்பது பண்டைக்கால முதல் நிகழ்ந்துவருங் கொள்கையாதலால் பிணம் வருமுன்னமே ஆக்ஷேபணை இன்றி ஐந்துபணமும் கொடுத்துச் சீட்டுப் பெற்றுக்கொள்வார்கள்; அக்காலமுதற்கொண்டு "வீட்டைப்பிடுங்கிவிறகாயெறித்தாலும் விண்ணனுக்கு ஐந்துபணம் கொடுக்க வேண்டும்," என்ற பழமொழி ஒன்றும் வழங்குவதாயிற்று. புணம் 1-இ அ-2 பை-6.

இப்படி வரி வசூல் செய்வதாற் கிடைத்தவற்றைக் கொண்டு, "நூற்றுக்குமேல் ஊற்று," என்ற மொழிக்கிலக்காக மேலுமேலும் விருத்திசெய்து வேண்டிய அளவுக்குக் கிராமம் பூமிகள் வாங்கிக்கொண்டு மிக்க செல்வமுடையோனாய் வாழ்ந்து வந்ததனோடு தான் தமிழிற் சிறிது பயிர்ச்சியுடையனாதலின் அதனையும் செல்வப்பொருள் போல் விருத்தி செய்து தமிழ் வித்துவான்கள் பலரையும் ஆதரித்து யாதேனும் பரிசளிப்பதும் அவரால் தான் பாடல் பெறுவதும் அன்றி வேண்டியவர்களுக்குக் கடன் (தனிசு) முதலானவை கொடுத்து வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியோடிருந்தனன். (சிலர் ஐந்து பணத்தில் மிதத்து நிலம் வாங்குவதெப்படி யென்று மறுப்பார்க்குச் சட்டை பூட்ஸ் தலைப்பாகை வாங்கிக் கோலஞ் செய்துகொள்ள நமக்குப் பொருள் மிஞ்சாது கடன் வாங்க நேரிடுமேயன்றி, இவ்வித அலங்கோலம் அக்காலத்தினர்க்கில்லையாதலானும் நிலவிலை மிகுந்த சகாயமுடைமையாலும் அவர்கள் செல்வத்தின் மிகுந்தவரென்றே கூறலாகும்.)

அக்காலத்தும் முற்கூறிய சுங்கம் வாங்கிக்கொண்டே வந்தும் இராஜாங்கத்தார் இதனைக் கவனித்தாரிலர். (இராச்சிய தந்திரம் இவ்வளவு ஒழுங்கு.) (இன்னும் வரும்.)

பின்னத்தூர், **அ. நாராயணசாமி ஐயன்.**

---

* டவுனில் எவ்விடத்திலிறந்தாலும் வடக்குவாயிலின் வழியே கொண்டுவடவாற்றங்கரையில் வைத்துத் தீக்கடன் செய்வது பண்டைக் காலமுதலுள்ள வழக்கம்.

# அணங்குகொ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே.

(216-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனித் தெய்வத்தன்மைபாகிய இயற்கைப்புணர்ச்சியில் ஐயமுதலாயினவரல் கூடுமென்ற அவர் தாமே குறளகத்துத் தெய்வத்தன்மை பொருந்திய களவொழுக்கமே யுரைக்கப்படுதலின் அதன்கண் மக்கட்டன்மையுடைய ஐயந் தெளிதல் முதலாயின கூறுதல் வழுவென்றார். அவர்க்கு இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தன்மையாகாதெனல் கருத்துப்போலும். தெய்வத்தன்மைபொருந்திய களவொழுக்கத்தின் முதற்பகுதி இயற்கைப்புணர்ச்சியே யென்பதும் இயற்கைப்புணர்ச்சியினன்றேற் களவொழுக்கமுமின்றா மென்பது முன்னரே கூறினேனாதலின் அது கொண்டு அவர் கூற்றுப்பொருந்தாமை யுணர்க.

இனி அகப்பொருணூலுள் மக்கட்டன்மையுடையவாகிய காட்சி ஐயமுதலிய ஒருதலைக்காமமும் பெருந்திணையாகிய பொருந்தாக் காமமும் தெய்வத்தன்மைபொருந்திய ஐந்திணைக் களவாகிய அன்புடைக்காமமும் விராய்வரலு மிலக்கணநெறியாமென முன்னரே யுரைத்தேன். அன்றியும் 'வினைகலந்து வென்றீகவேந்தன் மனை கலந்து மாலையயர்கம் விருந்து' என்னுமிக்குறள் வேந்தற்குற்றுழி பிரிந்தான் கூற்றன்றோ? இவன் தேவனெனின் வேந்தற்குப் பகைவெல்ல வரனீதலன்றி அவற்காகத்தான் பிரிந்து பகைமேற் செல்லானன்றோ. இத்தன்மைய குறள் இன்னும் பல விருத்தலின் தெய்வத்தன்மையாகிய களவின்கண் மக்கட்டன்மை மயங்கல் கூடாதெனல் வழுவாதலறிக. இனி அவர் தெய்வவொழுக்கங்காட்டி நெறிப்படுத்தலே முறையாதல் களவியலுரைப்பாயிரத்தினுங் காண்கவென்றார். அப்பாயிரம் அவ்வொழுக்கத்திற்கு அவ்வாறு வருதலே இலக்கணமெனக் கூறிற்றன்றி அவ்விலக்கணமுடையவொழுக்கத்தொடு ஏனைய வொழுக்கங்கள் மயங்கலாதெனக் கூறிற்றிலது; அவ்வுரையை நோக்குக. அன்றியும் ஆசிரியர்நாடகவழக்கினும் உலகியல்வழக்கினும் பாடல்சான்ற புலனெறிவழக்கமென்றாராதலின் கந்தருவவழக்கோடொத்த தெய்வத்தன்மை கூறும் நாட்க வழக்கொடு மக்கட்டன்மை கூறும் உலகியல்வழக்கும் விரவப்பாடுதலும் புலவராற்று வழக்கமென ஐயமின்றி யுணர்க.

அவர் பின்னும் காமத்துப்பாலைக் களவு கற்பென இரண்டாகப் பகுத்தமையானும் இவ்வதிகாரத்துக்குத் தகையணங்குறுத்தலென்று பெயரமைத்தமையானும் அதற்கு அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதலென்று பரிமேலழகருரை கூறினமையானும் கைக்கிளை கூறுதல் ஆசிரியர் கருத்தன்றென்றார். அவை பொருந்தாமை முன்னரே கூறப்பட்டது. அவர் அணங்குகொலென்னும் திருவாக்கு ஐயமாகாதென்பதற்குப்பின் தெளிநிலையுணர்த்துங் குறட்பா இல்லாமையே உறுகரியாகும் என்றும் கிழத்தியின் பேரெழில் தன்னை மிக தருத்திற்றாகக் கிழவன் கூறுதலே சான்றாம் என்றும் கூறினார். அணங்குகொல் ஆய்மயில்கொல் மாதர் கொல் என ஐயுற்ற தலைமகன் பின் நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் என்று தெளிந்து கூறலை யறிந்திலர் போலும். கண்ணிமைத்தலுமலமரலும் எதிர்நோக்கலும் பிறவும்தெரிதற்கருவியாமாறு 'வண்டே யிழையே' யென்னும் சூத்திரத்தானுணர்க. சுருங்கக்கூற நூலாதலிற் கனங்குழை என்றமையாற் காட்சியும் அணங்குகொல்மயில்கொல் மாதர் கொல் என்றமையான் ஐயமும் எதிர் நோக்குதல் தானைக்கொண்டன்ன தென்றமையாற் றெரிதலுந் தேறலுமடங்குமாறு காணுதலறிக.

கைக்கிளைக் காக்ஷி அணங்குறுத்தலும் அன்புடைக் காமத்து நிகழும் வழிநிலைக் காக்ஷி அணங்குறுத்தாமையும் முன்னரே கூறப்பட்டன.

இவ்வாற்றானே தெளிதலை யுணர்த்துங் குறளில்லை யென்பதும் எழில் வருத்திற்றாகக் கூறுதலே சான்றென்பதும் பொருந்தாமை காண்க.

இனி இவர் அஃறிணைப் பொருளானமயிலொடொப்பித்து ஐயுற்றானென்றல் கைக்கிளைப் பொருண்மைக்குச் சிறிது மேலாதென்றும் தொல்லாசிரியர் கோவைத்துறைக்கும் உயர்திணைப் பகுதியில் ஐயஞ்சென்றதாகக் கூறினவென்றும் அங்ஙனங் கூறுமையே தாங்கூறிய பொருளை வலியுறுத்துமென்றுங் கூறினார். யான் கனங்குழையாளது சாயலை மயிலின் சாயலொ

அணங்குகோ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே உ௬.எ

வென்றையுற்றானெனக் கூறினானன்றிக் கனங்குழையாளா கிய உயர்திணையை மயிலாகிய அஃறிணையென ஐயுற்றானெனக் கூறிலன். உயிர்திணைப் பொருளின் றன்மையை அஃறிணைப் பொருளின் றன்மையோ வென்றையுறல் சாலும்.

இவ்வாறு பிறதொல்லாசிரியரும் அஃறிணைக் கண்ணும் ஐயுற்றதாகக் கூறுவன பலவுள. இது குறிஞ்சிக் கலியுள் "ஈங் கே வருவாளிவள் யார் கொல் ஆங்கேயோர் வல்லவன்றை இய பாவைகொல் நால்லாருறுப்பெல்லாங் கொண்டியற்றியாள் கொல், வெறுப்பினால் வேண்டுவங்கொண்டதோர் கூற்றங் கொல்" எனக் கூறுமாற்றானும் விளங்கும். இதன்கட் பாவை கொல் கூற்றங்கொல் என்பன அஃறிணை யையமாதலறிக.

இனி அதனுரையில் நச்சினார்க்கினியர் இஃது ஐயுற்றுத் துணிந்து நெஞ்சொடு கூறியது என்றும் மேகலையானும் கலிங் கத்தானும் ஐயநீங்கி மகளென்று துணிந்தானென்றும் மருந்து பிறிதில்லாப் பெருந்துயர் எய்தினாதலின் இங்ஙனம் ஐயமு நிகழ்ந்தது என்றும் கூறுமாற்றானுந் தெளிக. இவ்வாறாகவும் உயர்திணைக்கணையமே கூறும் திருக்கோவைச் செய்யுள் களவி யலுரைச்செய்யுள் தஞ்சைச்செவ்வாணன்கோவைச் செய்யுள் இம்மூன்றனை மாத்திரங்காட்டிக் கைக்கிளையையத்தின்கண் வருஞ் செய்யுட்களெல்லாம் உயர்திணைப்பகுதியி லையமேகூறு மென்றும் இவ்வற்றின் வேறாக இருதிணை மயக்கமில்லை பற்றி வந்த அணங்குகொலென்னும் திருவாக்குக் கைக்கிளையைய மன்றாதல் ஒரு தலையாமென்றும் அவர் கூறியது முற்று மொவ் வாமை காண்க.

இனி அவர் 'அணங்குகொ லாய்மயில் கொல்லோகனங் குழைமாதர் கொல்மாலுமென் னெஞ்சு' என்னுங் குறட்குப் பரிமேலழகருரையை மறுத்துக் கனங்குழையாளாகிய இவள் சூர்மகளோ அன்றி மெல்லியதோர் கலவமயிலோ அன்றி மாதர்தாமோ என்றெண்ணி என் நெஞ்சமயங்கா நின்றதெனத் தாமாகவொருபுத்துரைகூறி எனவென்னும் ஒருசொல்விரித்து மாலுமென்பதனோடு முடிக்க என்றும் இஃது எனவெனச்சம்

என்றும் இவ்வினைவெச்சம் முன்னுள்ள உவமங்களைப் பொருளோடியைத்தற்கு உபகாரமாய்த் தொக்குநின்றது செய்யுளாகலின் என்றும் தாங்கருதியவாறெல்லா முரைத்தார். அவ்வாறுரைப்பின் என்றெண்ணி என்பதற்குச்செயப்படுபொருள் கனங்குழையாதலின் இக்கனங்குழையை அணங்குகொல் ஆய்மயில்கொல் மாதர் கொல் என்றெண்ணி யென்னெஞ்சு மயங்குகின்றதெனப் பொருள் படுமாறு அணங்குகொல் என்பதற்குமுன்னருரைத்தல் வேண்டுமாதலானும் செயப்படுபொருள் வருவிக்கவெனிற், கனங்குழை யென்பது அணங்கு முதலானவற்றுக்கு முன்னாகப் பின்னாக இருப்பினன்றி இடைநிற்றலின் அமையாமையானும் ஆய்மயில் கொல் கனங்குழைமாதர் கொல் என இடைநிற்றலான் அக்கனங்குழை எழுவாயாக நின்று அணங்கு முதலியவற்றைப் பயனிலையாகக் கொள்ளுமன்றிச் செயப்படுபொருளாகி என்றெண்ணி என்பதைப் பயனிலையாகக் கொள்ளாமையானும் அஃதுரையன்மை யறிக.

இனிக் கனங்குழை மாதர் கொல் என மாலுமென்னெஞ்சு என விரிப்பின் என்றெண்ணி என்பதும் அது கொண்டு முடியும் மாலும் என்னும் வினையும் இக்கனங்குழையாள் மாதரோவென் றெண்ணி மயங்கா நின்றுளெனக் கனங்குழையின் பயனிலையாகவே முடிந்து என்னெஞ்சு என்பது பயனிலையின்றி நின்று வற்றலும், அவற்றை நெஞ்சின் பயனிலையாக்கின் ஆண்டு கனங்குழை யென்பது எழுவாயாகி நிற்றலின் அக்கனங்குழை பயனிலையின்றி நின்று வற்றலுங் காண்க.

இதுவுமன்றி என்றெண்ணி என்பதைக் கனங்குழையின் பயனிலையாகவும் மாலும் என்பதை நெஞ்சின் பயனிலையாகவும் கொள்ளுதுமெனின் என்றெண்ணி யென்பது செய்தெனெச்சமாதலின் அது தன் கருத்தா வினை கொண்டு முடியுமல்லது வேறு கருத்தாவின் வினைகொண்டு முடியாமையும் இடையே கனங்குழை யென்பது தடுத்தலின் அதன் முன்னுள்ள அணங்கு மயிலென்னு மீரிடத்தும் மாதர் கொல் என்பதன் பின்னுள்ள வினைவெச்சஞ் சென்றியையாமையுங் காண்க

இவ்வாற்றான் என்றெண்ணி யென்பது தொகாமல் ஆண்டு விரிந்து நிற்பதாகக் கொள்ளினும் பொருளியையாமை யறிக.

இனித் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் என்னுமிடத் துப் புரத்தை எனச் செயப்படுபொருள் பெற்ற எரித்த என்னும் பெயரெச்சவினை தன்னெச்சமாகிய கடவுளென்னும் பெயர் தொகாது நின்றவிடத்துச் செய்யுளாயினும் தானுந் தொகாது நிற்றலன்றித் திரிபுரம் விரிசடைக் கடவுளெனத் தொகல் இலக்கணமன்று. அவ்வாறேஎன்றெண்ணி யென்பதும் அவர் கருத்தின்படி செய்யப்படு பொருளுடைமையின் அத னெச்சமாகிய மாதுமென்பது தொகாது நிற்பத் தான் மாத்தி ரந் தொகுதல் இருவகை வழக்கினுமில்லை. ஆசிரியர் தொல் காப்பியனார் பொருந்துமிடத்தன்றி ஏனைய இடத்துத்தொகுத் தல் கூடாதென்றறிவித்தற் பொருட்டே நன்னூலார் போலத் தொகுத்தலெனச் சுருங்கக்கூறாது தொகுக்கும் வழித்தொகுத் தலென்றார். இவ்வாற்றான் எனவென்பது செய்யுளாகலிற் றொக்கு நின்றதெனலும் இஃதெச்சமெனலும் மாதர்கொல் என்றதன் பின்னர்த் தொக்கு நின்ற எனவென்பது விரிந்து கனங்குழைக்கு முன்னுள்ள அணங்குடனும் மயிலுடனும் இயையுமெனலும் எட்டுணையுமியையாமை காண்க.

இனி அணங்கு முதலாயின உவமை யென்பதும் கனங் குழை பொருளென்பதும் அவர் கருத்தாதலானும் அவர் கருத் தின்படி கனங்குழையாளாகிய மாதரை யுணர்த்தலானும் அவ ளுக்கு அணங்கையும் மயிலையும் ஐய உவமையாக்கல் கூடும். இக்கனங்குழையாள் மாதரோ வெனத் தனக்குத்தானே உவ மையாதல் பொருந்தாது. அணங்கும் மயிலும் உவமையாயி னும் தலைமகன் உவமைக்கண் மயங்கினனேயன்றிப் பொருளா கிய கனங்குழையிடத்து மயங்காமையின் அவள் அணங்கு றுத்தாளாதலிற்றகையணங்குறுத்தலென்னு மதிகாரத்தோடி யையாது. அதிகாரத்தோடியையாமையேயன்றி அவை உவ மையாக முடியிற் காட்சி முதலிய கைக்கிளையாகாமலும் குறிப்பறிதல் புணர்ச்சி மகிழலென்னு மதிகாரத்துக்கு முன் னிருத்தலிற் புணர்ச்சியும் புணர்ச்சி நிமித்தமு மாகாமலும் வழுப்படும். இவ்வாற்றான் அணங்கு முதலானவற்றை ஐயவு வமைக்கண் வந்தவெனலும் அதுபற்றிக் கூறிய பிறவும் முற் றுமொவ்வாமை தெளிக.

இத்துணையுங் கூறிய வாற்ருற் பரிமேலழகர் கருத்துண ராது அவர் ஆகுபெயரு மன்மொழித்தொகையு மொன்றெனக் கொண்டாரெனக் கருதிச் சிவஞானமுனிவர் அவருரையை மறுத்தாரென்பதும் அவர் பரிமேலழகர் கூறிய கைக்கிளைப் பொருளை மறுத்திலரென்பதும் மறுத்திலராயினும் வேறுரை யேனும் யாண்டுங் கூறினரல்லரென்பதும் அவர் கூருவிடினும் அவர் கருத்திஃதேயென ஏதுவின்றித் தாமாகச் சொல்லல் வழக்கு முறையன் றென்பதும் அதனல் நான் சிவஞான முனி வர் கருத்துணராது கூறினேனெனல் பொருந்தா தென்பதும் கருத்துணர்ந்து அவர் கொள்கையை மறுத்தேனேயன்றி அவ ரையாவது பிறரையாவது நான் குற்றங்கூருமையால் அவர்க்கு ங்குற்றங்கூறினேனென்று எனக்குப்பழிகற்பித்தல் தகாதென் பதும்பிறன்கோண்மறுத்துத்தன் கோணிறுவல் குற்றமன்றென் பதும் அது சான்ருேர்கொள்கையே என்பதும் அணங்குகொல் என்னுங் குறள் கைக்கிளைத் திணையே யென்பதும் கைக்கிளை யைக் காமத்துப் பாலுட் கூறலுமிலக்கணமே யென்பதும் இயற்கைப் புணர்ச்சி களவின் முதற் பகுதியாதலின் அதனின் வேறன்றென்பதும் அதனன் இயற்கைப் புணர்ச்சியிற் காட்சி முதலவரல் கூடுமென்பதும் அது களவியலுள் வரலாகாதென் றுரைப்பது பெரிது முரணுகுமென்பதும் நக்கீரனரும் தொல் காப்பியனரும் பிறரும் யாண்டும் அவ்வாறு கூறிலரென்பதும் கந்தருவ வழக்கத்தோடொத்த ஐந்திணைக் களவு கூறுமிடத்து தெய்வ விலக்கணந் தீண்டாத ஏனைய கைக்கிளை பெருந்திணை யுங் கலந்துவரினும் இலக்கண நெறியே யென்பதும் மகா-ஸ்ரீ நா. வேதாசலம்பிள்ளை அவர்கள் சிவஞான முனிவர் கருத்தெ னக் கூறிய புத்துரை பொருளிலக்கணத்துக்கேயன்றிச் சொல் லிலக்கணத்துக்கு மாறுபாடுடைத் தென்பதும் அவ்வுரை முனிவர் கருத்தாயினும் அல்லது பிள்ளையவர்கள் கருத்தாயி னும் இன்னும் யாவர் கருத்தாயினும் இலக்கணமின்மையாற் கொள்ளற் பாற்றன் றென்பதும் பரிமேலழகருரை இலக்கணவ ழுவெய்தாமையின் அது கொள்ளற் பாற்றென்பதும் வள்ளுவ னர்க்குங் கைக்கிளையே கருத்தென்பதும் பிறவும் இனிது விள க்கி நிறுவப்பட்டன.

சோழவந்தான், அ. சண்முகம் பிள்ளை.

கடவுள் துணை.

# தஞ்சைத்தமிழ்ச்சங்கத்து நான்காம் வருஷ மஹோற்சவ அறிக்கைப் பத்திரம்.

தஞ்சைமாநகரின்கண் ஸ்தாபித்து நடைபெற்றுவருகின்ற இச்சங்கம், இன்று தன் நான்காம் வருட நிறைவை முட்டின்றிப் பெறுமாறு பாலித்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னர்ப் போற்றுவோமாக. இச்சங்கத்தின் நான்காம் வருஷோற்சவத்தைக் கொண்டாடுதற்பொருட்டு மெய்வருத்தம் பாராட்டாது பற்பல விடங்களினின்றும் வந்து தமது உண்மையான பாஷாபிமானத்திற் கோரறிகுறியாக ஈண்டுக்கூடிய அங்கத்தினராய வித்வான்களும் ஏனைத்தமிழபிமானிகளுமாகிய பெரியோர்களின் அனுஞ்ஞையைப்பெற்று இச்சங்கத்தின் சென்றவருடவரலாற்றினைச் சுருக்கமாக வெளியிடத் தொடங்குகிறேன்.

## 2. அங்கத்தினரும், சபைகூடியதும்.

இவ்வருடத் தொடக்கத்தில் இச்சங்கத்தின் அங்கத்தினராக அமர்ந்திருந்தார் இருபதின்மர். இப்போது அங்கத்தினராயுள்ளார் 66 பேராவர். இச்சங்கம் இவ்வருடம் முப்பது முறை கூடிற்று.

## 3. கல்விப்பயிற்சி.

இவ்வருடம் இச்சங்கம் பயின்றநூல்கள்:— முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பதிற்றுப்பத்தில் நான்கு செய்யுட்கள், கம்பராமாயணத்தில் நானூற்றெண்பது பாடல்கள், நன்னூலிற் சிற்சில பகுதிகள்.

சங்கத்தின் கோட்பாட்டிற் கிணங்க இவ்வருடம் சில பௌதிக ரசாயன சாஸ்திரவியாசங்களும், பொதுவான வியாசங்களும், மொழிபெயர்ப்புக்களும், ஆங்கில வித்வான்களின் சரித்திரங்களும் எழுதிப் படிக்கப்பட்டன. அவைகளில் தமிழகம் வாயிலாக வெளிவந்தவை நிற்க, எஞ்சியவை:—

1. நன்மையும் தீமையும்: பண்டிதர் எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

2. தமிழ்ப்பாஷாபிவிருத்தி: பண்டிதர் வி. எஸ். முத்து ஸாமி ஐயர்.

3. தொல்காப்பியத்தின் முதன்மை: சோழவந்தான் வித்வான் அ. சண்முகம்பிள்ளை அவர்கள்.

## 4. புத்தகசாலை.

சங்கத்துப் புத்தகசாலையில் சென்றவருட வாரம்பத்தில் 219 புத்தகங்கள் இருந்தன. இப்போது புத்தகசாலையில் இருப்பன 306. இவ்வருடம் புத்தகசாலைக்குப் புதிதாகப் புத்தகங்கள் உதவிய தமிழபிமானிகளான வனஜானந்த சுவாமிகள், பண்டிதர் எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள், பண்டிதர் எல். உலகநாதபிள்ளை அவர்கள், சோழவந்தான் வித்வான் அ. சண்முகம்பிள்ளை அவர்கள், ஜனானுகூலன் பத்திராதிபர் அவர்கள், ஜி. எஸ். மணியா அண்டு கம்பெனியார் அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ உடையார்கோவில் இராமஸ்வாமி அய்யர் அவர்கள்—M. A., மகா-௱-௱-ஸ்ரீ எம். சாம்பசிவநாயனார் அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ வெங்கட்டராமராஜா அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ தி. ஏ. நரசிம்ம ஐயங்கார் அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ கே. இராமாநுஜ ஐயங்கார் அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ ந. ரா. ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள், B. A. சங்கத்தின் காரியதரிசி அவர்கள், இவர்களுக்கு வந்தனம் செலுத்துகிறோம்.

மேலும், விவேகபாநு, விவேகசிந்தாமணி, ஸ்ரீவாணிவிலாஸினீ, மாதர்மனோரஞ்சனி, நாகை நீலலோசனி, சைவசித்தாந்தபானு, சுதேசி, பிரஜானுகூலன், சிங்கை ஜனமித்திரன், வியவசாயதீபிகை, ஆகிய இப்பத்திரிகைகளைப் பிரசுரிக்குங்காலந்தோறும் அனுப்பிவருகிற பத்திராதிபர்களுக்கு அன்புடன் நன்றி செலுத்துகின்றோம்.

## 5. தமிழகம்.

நாகரீகம் சிறந்த பலதேசங்களில் வழங்கிவரும் பாஷைகளிலுள்ள சாஸ்திரவாராய்ச்சி, சரித்திரவாராய்ச்சி, இலக்கியவாராய்ச்சி, முதலான விஷயங்களை நம் பாஷையில் அமைத்துக்கொள்ளவேண்டி இவ்வருடாரம்பத்தில் இப்பத்திரிகையைச் சங்கவாயிலாக வெளியிட்டோம். இதுகாறும் இப்பத்திரிகையின் 9 சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. யாம் கொண்ட கருத்திற்கிணங்க இப்பத்திரிகை உருவமைந்து நின்றுலவ இன்

னமும் சில நாட் செல்லும். மேலே காட்டிய நுண்ணிய விஷயங்களை எங்களால் எவ்வளவு எளிய நடையில் அமைக்கலாமோ அவ்வளவு எளிய நடையில் அமைத்துக்கொண்டு வருகிறோம். வியாசங்களை இன்னமும் இலகுவான நடையில் எழுதுவதுதான் எங்கள் நோக்கம். ஆயினும் விஷயங்கள் சாஸ்திர சம்பந்தமுள்ளனவாயும் நூதனமானவைகளாயும் இருத்தலால், ஆரம்பத்தில் சற்றுக் கடினமாகவே தோற்றும். ஆதலால் கல்விமான்கள் பலரும் இதனை ஆதரிக்கத்தகும். எவ்விதப் பெரிய காரியங்களும் துணைவலியின்றி நடைபெறாதாதலால், இக்காரியம் நிறைவேறும்படி ஈசன் அருளையும் இங்கு நிறைந்துள்ள தமிழபிமானிகளின் அபிமானத்தையும் வேண்டுகின்றோம்.

## 6. தமிழ்க் கலாசாலை.

இக்கலாசாலை இவ்வருஷம் இரண்டுவகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டுவகுப்புக்களிலேயும் படிக்கும் மாணாக்கர்கள் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூலைச்சேர்ந்தவர்களே. தமிழில் அபிமானமுள்ள யாவரேயாயினும் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவார்களாயின் யாங்கள் அவர்களைச் சேர்த்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்.

இக்கலாசாலைத் தலைமை உபாத்தியாயர் **K. M.** நடேச ஐயர் அவர்கள். பண்டிதர் **L.** உலகநாதபிள்ளை அவர்களும், பண்டிதர் **C. S.** முத்துஸாமி ஐயர் அவர்களும் உதவி உபாத்தியாயர்களாக விருந்து வேலைபார்த்து வருகிறார்கள்.

இக்கலாசாலையில் இவ்வாண்டிற் கல்வி பயின்ற மாணாக்கர்கள் பதினெழுவர்.

இக்கலாசாலை இரண்டாவதுவகுப்பு மாணவர்களுக்கு சர்வகலாசாலைச் சங்கத்தாரால் மெற்றிக்குலேஷன் பரிக்ஷைக்குப் பாடமாக வைத்திருக்கும் புத்தகங்களும், முதலாவது வகுப்பிற்கு அருணசலபுராணமும், நிகண்டிற் சில பாகங்களும், நன்னூலிற் சில வதிகாரங்களும், ஆகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் மெற்றிக்குலேஷன் வகுப்பினருக்கு நடத்தும் பரிட்சைக்கு எங்கள் கலாசாலை மாணாக்கர்களிற் சிலரைத் தெரிந்தெடுத்தனுப்பி யிருக்கின்றோம். மேலும் இரண்டுவகுப்பிலும் உள்ள பிள்ளைகளுக்கும் அவர்கள் கல்வித்

324



திறமையை அறிய வருஷாந்தரப் பரீட்சைகள் நாலது மாதம் முதல் தேதி நடத்தினோம் அப்பரீட்சைகளில் தேறிய மாணாக்கர்களுக்கு மேன்மேலும் கல்வி பயிலுதற்கண் ஊக்க முண்டாதற் பொருட்டும் ஏனையோரும் அவர்களைப்பார்த்துத் தாமும் கல்வி பயில முயலுதற்பொருட்டும் பரிசளிக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

## 8. வரவு செலவு கணக்கு.

| | |
|---|---|
| 1904ஞூ அக்டோபர்மீ 1௳ கையிருப்பு .... | 21— 8—2 |
| 1904-05ஞூ மொத்த சங்க வரவு ... | 59— 7—1 |
| 1905ஞூ அக்டோபர்மீ 1௳ வரை, மொத்த தமிழகம் வரவு | 346—13—3 |
| ஆக கூடுதல் | 427—12—6 |
| 1904-05ஞூ சங்கச்செலவு .... | 50— 4—0 |
| 1905ஞூ அக்டோபர்மீ 1௳ வரை மொத்த தமிழகச்செலவு | 334—15—8 |
| ஆக கூடுதல் | 385— 3—8 |
| ஆக வருஷாந்தக் கையிருப்பு .... | 42— 8—10 |

## 9. சங்கத்துக்கு விஜயஞ் செய்தவர்கள்.

இவ்வருடம் இச்சங்கத்திற்கு விஜயஞ்செய்து எம்மைக் கௌரவப்படுத்தியவர்கள் :—சோழவந்தான் வித்வான் அ. சண்முகம் பிள்ளை அவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ து. அ. கோபிநாத ராவ் அவர்கள் M. A.

அக்கிராசனாதிபதியாய் இச்சங்கத்திற்கு வேண்டுவனவாய பலவகை உதவிகளைப் புரிந்து பயன்கருதாது தமிழ்ப்பாஷையினபிவிருத்திக்கென்றே உழைத்துவரும் ஸ்ரீமான் R. சுவாமிநாத விஜயதேவர் அவர்களை நீடூழிவாழ்வார்களாகவெனப்பன்முறையும் வாழ்த்துவதல்லது தமிழுலகால் செய்யப்படுங் கைமாறென்னுளது. இச்சங்கமும், இச்சங்கத்தினக்கிராசனாதிபதியவர்களும், போஷகர்களும், அங்கத்தினர்களும், இங்கு விஜயஞ்செய்திருக்கும் ஏனை அபிமான சீலர்களும், எக்காலத்தும், எவ்விதத்தும், எவ்வளவுங் குறைபாடின்றி நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல கடவுளின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்
1905ஞூ அக்டோபர்மீ 7௳

கி. இராஜமையங்கார்,
காரியதரிசி.

## போஷகர்கள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ R. சுவாமிநாத விஜயதேவர் அவர்கள் சங்கத்தலைவர்
2. ,, K. கோபாலசாமி ஐயங்கார் அவர்கள், B. A.
3. ,, T. D. சுவாமிநாத ஐயர் அவர்கள்.
4. ,, கோபாலசாமி ரகுநாத ராஜாளியார் அவர்கள்.
5. ,, P. S. சிவஸ்வாமி ஐயர் அவர்கள், B. A., B. L.
6. ,, சிதம்பரநாத முதலியார் அவர்கள், B. A.
7. ,, திரு. நாராயணப் பிள்ளை அவர்கள்.

## கௌரவ அங்கத்தினர்.

8. மகா-ள-ள-ஸ்ரீ K. M. சிதம்பரம் ஐயர் அவர்கள்.
9. ,, T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்
10. ,, சேதுராம பாரதியார் அவர்கள்.
11. ,, R. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.
12. ,, L. உலகநாத பிள்ளை அவர்கள்.
13. ,, C. S. முத்துஸாமி ஐயர் அவர்கள்.
14. ,, வனஜானந்த சுவாமிகள்.
15. ,, S. ஸ்ரீரங்காசாரியார் அவர்கள் B. A., L. T.
16. ,, S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.
17. ,, வித்வான் அரசஞ் சண்முகம் பிள்ளை அவர்கள்.
18. ,, E. சூரியநாராயண ஐயர் அவர்கள், B. A, B. L.
19. ,, V. குப்புஸ்வாமி ராஜு அவர்கள்.
20. ,, C. வெங்கடவராக தீக்ஷிதர் அவர்கள்.
21. ,, B. அப்புராவ் அவர்கள்.
22. ,, S. வெங்கட சுப்பையர் அவர்கள், B. A., B. L.
23. ,, A. சிவக்கொழுந்து முதலியார் அவர்கள் B. A.

24. மகா-ள-ள-ஸ்ரீ முத்துராம பாகவதர் அவர்கள்.
25. ,, A. அரங்கசாமி ஐயங்கார் அவர்கள், B A., B. L.
26. ,, T. A. கோபிநாத ராவ் அவர்கள், M. A.
27. ,, N. P. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.
28. ,, T. V. கிருஷ்ணதாஸ் அவர்கள்.
29. ,, N. K. இராமசாமி ஐயர் அவர்கள், B. A., B. L.
30. ,, G. S. அரங்கநாத சாஸ்திரிகள்.
31. ,, P. K. கல்யாணராம சாஸ்திரிகள் B.A.
32. ,, V. A. கோபால கிருஷ்ணையரவர்கள்.

## அங்கத்தினர்.

### உள்ளூர்.

33. மகா-ள-ள-ஸ்ரீ K. தர்மராஜ ஐயர்.
34. ,, K. இராமாநுஜ ஐயங்கார்.
35. ,, S. வெங்கட்ட சுப்பராவ்.
36. ,, T. R. ஸ்ரீநிவாச அய்யங்கார், B. A.
37. ,, V. சுப்பையர், B. A.
38. ,, N. இராமசந்திர நாராயண்ஜி.
39. ,, K. M. நடேச ஐயர்.
40. ,, உ. நா. அப்பாசாமி ஐயர்.
41. ,, S சுப்பிரமணிய சாஸ்திரியார்.
42. ,, T. இராஜமையங்கார் B. A., L. T.
43. ,, T. R. கோபால ராவ்.
44. ,, மகாதேவ பிள்ளை.
45. ,, சோலைமுத்துப் பிள்ளை
46. ,, ஸ்ரீநிவாச ஐயங்கார்.
47. ,, R. சோமசுந்தரம் பிள்ளை.
48. ,, T. A. கணபதி ஐயர்.
49. ,, V. கந்தசாமி செட்டியார்.
50. ,, T. S. சோமு ராவ்
51. ,, T. S. நடேச ஐயர்.
52. ,, T. G. விசுவநாத ஐயர்.

வெளியூர்.

53. மகா-ா-ா-ஸ்ரீ முத்துசாமி நாடார் (நடுக்காவேரி.)
54. ,, சாம்பசிவநாயனார் (சாலியமங்கலம்.)
55. ,, கோபாலசாமி நாயுடு (சாலியமங்கலம்.)
56. ,, நாராயணசாமி விஞ்சைராயர் (சாலிய மங்கலம்.)
57. ,, முருக பொன்னுசாமி பிள்ளை (புலவர் நத்தம்.)
58. ,, K. இராமரத்னம் ஐயர், B. A. (கதிரா மங்கலம்.)
59 ,, முத்துசாமி பிள்ளை (கருப்பூர் கோனேரி ராஜபுரம்.)
60. ,, A. G. கணபதி ஐயர் (அம்பாசமுத் திரம்.)
61. ,, பிரதாப ரகுநாதநாயக் (அய்யம் பேட்டை.)
62. ,, இராமசாமி வன்னியர் (மேலமாகாணம்)
63. ,, கோதண்டபாணி தஞ்சைராயர் (மணக் குடி.)
64. ,, ரா. நாராயணசாமி ராஜாளியார் (ஹரித் துவார மங்கலம்.)
65. ,, K. ஸ்ரீநிவாஸலு நாயுடு (பட்டீசுரம்.)
66. ,, வ. கோவிந்தசாமிவண்டர் (விளத்தூர்.)

முற்றும்.

# ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மீது

பண்டிதர். ஸி. எஸ். முத்துஸாமி ஐயர் பாடிய

## வாழ்த்து.

உலகுதொழு திடச்செங்கோ லோச்சியசுந் தரக்கடவு
ளருமையோ டென்று
நிலவுறுநெஞ் சகமுடையான் சேதுபதி நெடும்புகழ்க்கோர்
நிலைய மானோன்
பலவளமும் மிலகுறுபா லவனத்த மெனும்பதிசெய்
பாக்கிய சீலன்
புலவர்குழாந் தழைத்தோங்கப் பொன்மாரி பொழிகின்ற
புனித மேகம் (1)

பூமேவு திருமகளும் புகழ்மேவு கலைமகளும்
பொருந்த வாழ்வோன்
நாமேவு கவிவாணர் நலத்தைத்தன் னலமாக
நயந்த கோமான்
காமேவு கரதலத்தான் கலைகள்பல வாய்வார்க்கோர்
கருவியானான்
தேமேவு சிந்தையினான் விந்தைகுடி கொண்டமருந்
திண்டோண் மன்னன் (2)

பொன்னான குணமுடையான் பொருளுடையா
னருளுடையான் புகழான் மிக்கான்
நன்னாவ லோர்புகழு நாகரிகனாம்பொன்னுச்
சாமி நல்லோன்
முன்னாளின் றவப்பயனே யிந்நாளின் மகவுருவாய்
முளைத்த தொப்பான்
பன்னருந் தமிழுலகந் தமிழ்த்தெய்வ மெனப்பாடும்
பண்பு வாய்ந்தோன் (3)

சிவனருளாற் றோன்றியெழிற் றென்பொதிய வரைமருவிச்
சிறப்புற் றோங்குந்
தவன்மனையிற் றவழ்ந்துமதிக் குலத்தவர்பா லொருமூன்று
சங்க மேவி
யவனிபுகழ்ந் திடவளர்ந்த தமிழ்மடந்தை யிந்நாளிவ்
வரசற் சார்ந்து
பவனிவரக் கருதினளென் றேபலருங் கொண்டாடும்.
பரிசு பெற்றோன் (4)

பண்டையதொல் காப்பியமே முதற்பலவா மிலக்கணமும்.
பயின்று முன்னோர்
விண்டபல விலக்கியமு மாகமமு முணர்ந்தவற்றுள்
விளங்கு சாரங்
கொண்டொருபன் னூற்றிரட்டிக் குவலயத்தார்க் கீந்துகுறு
முனிவன் றந்த
கண்டினும்பா கினுமினிய தமிழ்க்கடலை யொருதனியே
கரை கண்டானே (5)

கங்கைமுடிக் கணிந்தபிரான் முதலாக மேனாளிற்
கணித்த மூன்று
சங்கமுட னொருநான்காஞ் சங்கமெனக் கற்றவர்கள்
சார்ந்து மேவக்
கொங்குவிரி மலர்ப்பொழில்சூழ் கூடலிலோர் தமிழ்ச்சங்கங்
கூட்டி ஞால
மெங்குமிக விசைபரப்பி யினியதமிழ் நாட்டினுக்கோ
ரிறைவ னானான் (6)

தமிழ்க்கடற்குத் தண்மதியாய்த் தமிழர்கட்குக் கற்பகமாய்த்
தரணி மேவி
அமிழ்துநிகர் மொழியாலு மருமைதிகழ் குணத்தாலு
மாற்ற லாலும்
இமிழ்திரைசூழ் வையகத்தோர்க் கின்பமே விளைக்கின்ற
வியல்பி னாலுங்
கமழ்கின்ற புகழ்ப்பாண்டித் துரைமன்னன் நீடூழிக்
காலம் வாழி. (7)

# புத்தக வரவு.

சென்ற மாதத்தில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள்,—

சுதேசி, இ 92-99 ; (2) சிங்கைஜனமித்திரன், இ 9-11 ; (3) நாகை நீலலோசனி, இ 15-17 ; (4) பிரஜானுகூலன், இ 3,5,6 ; (5) யதார்த்தவசனி, இ 2, 4, ; (6) விவேகசிந்தாமணீ, இ 4, 5 ; (7) மாதர் மனோரஞ்சினி, இ 7 ; (8) தேனீ, ந 6 ; (9) ஸ்ரீவாணி விலாஸினீ, இ 5 ; (10) விவேகபாநு, புத். 9 ; (11) வியவசாய தீபிகை, பிரதி 4.

(12) வைகறை : இது வியவசாய விஷயங்களைப்பற்றியும் பெண்கல்வியைப்பற்றியும் கூறும் ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் இரண்டாம் சஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. 'எருவின் பிரயோசனம்,' 'பெரிய கலப்பை,' 'பயிர்த்தொழில் கிராண்டு,' 'தும்மல்மரம்,' 'கற்பின் சிறப்பு,' 'பூர்வீக பெண்மணிகள்,' ஆகிய விஷயங்கள் கவனிக்கத்தக்கன. இப்பத்திரிகையின் வருஷ சந்தா நாலணா மாத்திரமே. பத்திரிகை சென்னையில் பிரசுரமாகிறது.

(13) சென்னை இராஜதானிக் கலாசாலையில் ஓர் தமிழ் மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதைக்கேட்டுச் சந்தோஷமடைந்தோம். அச்சங்கத்தின் வருஷமஹோற்சவமும் சென்ற புரட்டாசிமீ 27உ நடந்தேறியிருக்குமென்று கருதுகிறோம். 1904-05-ம் வருஷத்திய அறிக்கைப்பத்திரம் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. "வித்யாசம்பந்தமும் மத சம்மந்தமுமான விஷயங்களிற் கல்வி கேள்விகளால் தேர்ச்சி பெற்ற வித்வத் சிரேஷ்டர்களைக் கொண்டு பிரசங்கம் புரிவிக்கச் செய்வதாலும், சங்க அங்கத்தினர்களை வியாசங்கள் வரைந்து வாசிக்கச் செய்வதாலும், மாணவர்களுக்குத் தமிழ்ச்சுவையை ஊட்டி, அவர்களின் தமிழறிவை விருத்திபண்ணும் கருத்தோடு, சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது." இவர்கள் நோக்கத்திற் கிணங்கச் சென்றவருஷம் 14 அரிய வியாசங்கள் எழுதிப் படிக்கப்பட்டோ உபந்நியாசஞ் செய்யப்பட்டோ வெளிவந்திருக்கின்றன. இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி பிரம்ஹஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் என்றால் இச்சங்கம் நிலைபெற்றுவரும் என்பதிற் கோரைய முண்டோ ?

பத்திராசிரியன்.